# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2436/12 - 2025 මැයි මස 16 වැනි සිකුරාදා - 2025.05.16

*2436/12 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய பொலிஸ் ஆணைக்குழு**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசிலயமைப்பின் 155ஜ ஆவது உறுப்புரைக்கமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்களை பகிர்ந்தளித்தல்**

அரசியலமைப்பின் 155ஜ ஆம் பிரிவின் கீழ் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட 2023.07.20 ஆந் திகதியிடப்பட்ட 2341/ 51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் அட்டவணையின் 4 மற்றும் 8 ஆம் இலக்கங்களின் கீழ் வெளியிடப்பட்ட ஏற்பாடுகள் பின்வருமாறு திருத்தப்பட வேண்டும் என்றும், 5 ஆம் இலக்கத்தின் கீழ் உள்ள விதிகள் நீக்கப்பட வேண்டும் என்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு இத்தால் நியமிக்கிறது.

| *நெடுவரிசை I* | *நெடுவரிசை II* | *நெடுவரிசை III* |
|---|---|---|
| *அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகள்* | *பொலிஸ் உத்தியோகத்தர் வகை* | *அளிக்கப்பட்ட அதிகாரம்* |
| 4. பிரதி பொலிஸ் மா அதிபர்கள் | அ) சார்ஜென்ட் மேஜர் பதவியில் உள்ள மற்றும் சார்ஜென்ட் மேஜர் பதவிக்குக் கீழே உள்ள பொலிஸ் அதிகாரிகள்<br><br>ஆ) பொலிஸ் பாதுகாப்பு உதவி அதிகாரிகள் | அ) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளின்படி தங்களின் நிர்வாக அதிகார வரம்பிற்குள் இடமாற்றங்கள் செய்தல்<br><br>ஆ) தங்களின் நிர்வாக அதிகார வரம்பிற்குள் ( பணிநீக்கம், பணியை முடிவுறுத்தல், நியமனம் இரத்து செய்தல் தவிர) பணி இடைநிறுத்தம் செய்தல் மற்றும் ஒழுக்க நிர்வாக நடவடிக்கைகள். |
| 5. அகற்றப்பட்டுள்ளது | 5. அகற்றப்பட்டுள்ளது | 5. அகற்றப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 8. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் | அ) பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பரிசோதகர் பதவிக்குக் கீழ் நிலை தரத்தில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் ( பொலிஸ் நிலையப் பொறுப்பாளர்கள் மற்றும் செயல்பாட்டுப் பிரிவுகளின் பொறுப்பாளர்கள் நீங்கலாக)<br><br>ஆ) பொலிஸ் பாதுகாப்பு உதவி அதிகாரிகள் | அ) அதன் நிர்வாக அதிகார வரம்பிற்குள் ஒழுக்காற்று அறை தண்டனைகள் விதித்தல் |
| | இ) சார்ஜென்ட் மேஜர் பதவியில் உள்ள மற்றும் சார்ஜென்ட் மேஜர் பதவிக்குக் கீழ் நிலை பதவியில் உள்ள பொலிஸ் அதிகாரிகள்<br><br>ஈ) பொலிஸ் பாதுகாப்பு உதவி அதிகாரிகள் | ஆ) அதன் நிர்வாக அதிகார வரம்பிற்குள் சேவையை இடைநிறுத்தல் |

02. மேலும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் 2023.07.20 ஆந் திகதியிடப்பட்ட 2341/ 51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியால் அதிகாரம் வழங்கப்பட்ட அறிவிப்பில் உள்ள மற்றைய ஏற்பாடுகள் மாற்றமில்லாமல் இருக்கும்.

03. இந்த அதிகாரப் பகிர்வு 2025, யூன் மாதம் 01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் என்றும் இத்தால் நியமிக்கப்படுகிறது.

04. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்கும்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில்,

**ஈ. டபிள்யூ. எம். லலித் ஏக்கநாயக்க,**
தலைவர்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு அலுவலகத்தில்,
பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம்,
கட்டிட இல. 9, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு -07,
2025, மே 07.

EOG 05- 0141